பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
12 05 2025 12 40
திங்கட்கிழமை பிற்பகல்
ஆகாஷவாணி செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் மற்றும் முப்படைத் தளபதிகளுடன் இன்று ஆலோசனை நடத்தியுள்ளார்.
- சண்டை நிறுத்தம் தொடர்பாக இந்தியா – பாகிஸ்தான் ராணுவ உயரதிகாரிகள் அளவிலான பேச்சுவார்த்தை தொடங்கியது.
- சர்வதேச செவிலியர் தினத்தையொட்டி, மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா உள்ளிட்ட தலைவர்கள் செவிலியர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.
- சத்தீஷ்கரில் நேரிட்ட சாலை விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர்.
- சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக விராட் கோலி அறிவித்துள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் --*

பிரதமர் திரு நரேந்திர மோடி மத்திய அமைச்சர்கள் மற்றும் ராணுவ தளபதிகளுடன் இன்று ஆலோசனை நடத்தியுள்ளார்.

பிரதமரின் இல்லத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனையில் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், வெளியுறவுத் துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் மற்றும் முப்படைகளின் தலைமை தளபதிகள் கலந்து கொண்டனர்.

சண்டை நிறுத்தம் தொடர்பாக, ராணுவ நடவடிக்கைகளுக்கான இந்தியா – பாகிஸ்தான் தலைமை இயக்குநர்கள் அளவில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் தெரிவிக்க வேண்டிய அம்சங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

இதனிடையே, இருநாட்டு ராணுவ அதிகாரிகளும் தற்போது பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

இந்திய தரப்பில் லெப்டினன்ட் ஜெனரல் Rajiv Ghai இந்த பேச்சுவார்த்தையை மேற்கொண்டுள்ளார்.

<<<><><><>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பிறகு நேற்றிரவு எல்லைப் பகுதியில் எவ்வித தாக்குதலும் இன்றி அமைதி நிலவியதாக ராணுவம் தெரிவித்துள்ளது.

ஜம்மு கஷ்மீர் மற்றும் பஞ்சாபையொட்டிய சர்வதேச எல்லைப் பகுதியில், இருதரப்பும் அமைதியை கடைபிடித்ததாக ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும், அமிர்தசரஸ் உள்ளிட்ட பஞ்சாபின் ஆறு எல்லைப்புற மாவட்டங்களில் பள்ளிகள் நாளையும் மூடப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் இன்று சைரன் ஒலி எழுப்பப்படாது என்ற போதிலும், மக்கள் வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே, இந்தியா-பாகிஸ்தான் மோதல் காரணமாக, மூடப்பட்டிருந்த அமிர்தசரஸ், ஸ்ரீநகர், ஜம்மு, சிம்லா உள்ளிட்ட 32 விமான நிலையங்களையும் 25 வான்பாதைகளையும் திறக்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

<<<><><><>>>

சர்வதேச செவிலியர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், செவிலியர்களின் நலன் காப்பது நாட்டின் சுகாதார அமைப்புகளை வலுப்படுத்துவதோடு, தேச வளர்ச்சிக்கும் உதவிகரமாக இருக்கும் என தெரிவித்துள்ளார்.

செவிலியர்களுக்காக மேற்கொள்ளப்படும் முதலீடுகள், ஆரோக்கியமான மற்றும் ஆக்கப்பூர்வமான சமுதாயத்தையும் எழுச்சிமிக்க எதிர்காலத்தையும் உருவாக்கும் என்றும் அவர் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

செவிலியர்களின் இரக்க குணம் மற்றும் பணியில் காட்டும் உறுதிப்பாட்டிற்கு மரியாதை செலுத்துவதாகவும் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி, தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சாதி, மதம், நிறம், பாலினம், சமூக தகுதி என எதைப் பற்றியும் சிந்திக்காமல் அனைவரையும் ஒன்றுபோல கருதி, அன்புடன் சிகிச்சை வழங்கி ஆதரிக்கும் செவிலியர்களுக்கு தமது நல்வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

<<<><><><>>>

இதனிடையே, செவிலியர் தினம் தாங்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதற்கு ஊக்கம் அளிப்பதாக அரக்கோணம் ரயில்வே மருத்துவமனையின் தலைமை செவிலியர் தெரிவித்துள்ளார்.

(சவுண்ட் பைட் - அரசி - 40 செகண்ட்ஸ்)

<<<><><><>>>

பல ஆண்டுகளாக தேடப்பட்டு வந்த காலிஸ்தான் தீவிரவாதியான கஷ்மீர் சிங் கல்வாடி, தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

2016 ஆம் ஆண்டு நாபா சிறையிலிருந்து தப்பிய லூதியானாவைச் சேர்ந்த கல்வாடி, தேசிய புலனாய்வு முகமை மற்றும் பீஹார் காவல்துறையினர் கூட்டாக மேற்கொண்ட தேடுதல் வேட்டையின் போது அம்மாநிலத்தின் மோதிஹறி பகுதியில் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் தாக்குதல் நடத்தும் தீவிரவாதிகள் நேபாளத்திற்கு தப்பிச்செல்ல உதவி செய்து வந்ததுடன் பாபர்கல்சா அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகளுடன் நெருங்கிய தொடர்பில் இருந்ததாகவும் தேசிய புலனாய்வு முகமை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

<<<><><><>>>

அசாம் மாநிலத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் பிஜேபி முன்னிலை பெற்றுள்ளது.

நேற்று காலை தொடங்கிய வாக்கு எண்ணிக்கையின் முடிவுகள் அதிகாரப்பூர்வமாக வெளியாகவில்லை என்ற போதிலும், பிஜேபி மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் முன்னிலை வகிப்பதாக அம்மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அசாமில் உள்ள 397 ஜில்லா பரிஷத் உறுப்பினர்கள், 2 ஆயிரத்து 192 பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்கள் மற்றும் 21 ஆயிரத்து 920 கிராம பஞ்சாயத்து உறுப்பினர் பதவி இடங்களுக்கு இம்மாதம் 2 மற்றும் 7 ஆம் தேதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது.

<<<><><><>>>

புத்த பூர்ணிமாவையொட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், புத்தரின் போதனைகளான உண்மை, சமத்துவம், நல்லிணக்கம் போன்றவை மனித குலத்திற்கு எப்போதும் வழிகாட்டியாக திகழும் என தெரிவித்துள்ளார்.

புத்தரின் தியாக உணர்வுகள் உலக மக்கள் அனைவரும் இரக்கம் மற்றும் அமைதியுடன் திகழச்செய்யும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<><><><>>>

அஇஅதிமுக பொதுச் செயலாளரும், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான திரு எடப்பாடி பழனிசாமி பிறந்தநாளையொட்டி, தலைவர்கள் பலர் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

மத்திய இணையமைச்சர் திரு எல் முருகன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், திரு எடப்பாடி பழனிசாமி நல்ல உடல் ஆரோக்கியமும், மகிழ்வும் பெற்று தமிழக மக்களுக்கு தொடர்ந்து சமூக பணியாற்றிட இறைவனை வேண்டிக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், திரு எடப்பாடி பழனிசாமி முழு ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் மக்கள் சேவை புரிய வேண்டிக் கொள்வதாக தெரிவித்துள்ளார்.

<<<><><><>>>

மதுரை சித்திரை திருவிழாவின் முக்கிய அம்சமான கள்ளழகர் வைகையாற்றில் இறங்கும் வேளையில், நாம் அனைவரும் பக்தி, கலாச்சாரம் மற்றும் தலைமுறைகளை ஒன்றிணைக்கும் புனிதமான பாரம்பரியத்தை கொண்டாடுவதாக தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்த கொண்டாட்டம் நமது பாரம்பரியத்தின் வலிமையையும், காலத்தால் அழியாத ஒற்றுமையில் நம்மை ஒன்றிணைக்கும் உணர்வையும் தெளிவாக பிரதிபலிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

கள்ளழகரின் அருள் மக்களுக்கு வளம் சேர்ப்பதுடன் ஆன்மீக பலத்தையும் நமது தேசத்திற்கு சிறப்பையும் ஏற்படுத்தட்டும் என்றும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

<<<><><><>>>

தில்லி சட்டப்பேரவை வளாகத்தில் அமைக்கப்படவுள்ள 500 கிலோவாட் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையத்திற்கு துணை நிலை ஆளுநர் திரு வி கே சக்சேனா இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

இந்த மின்உற்பத்தி நிலையம் செயல்பாட்டிற்கு வரும் போது தில்லி சட்டப்பேரவைக்கு மாதம் 15 லட்சம் ரூபாய் அளவிற்கு மின்சார கட்டணத்தில் சேமிப்பு ஏற்படுவதுடன் முற்றிலும் சூரியசக்தியால் இயங்கும் முதலாவது சட்டப்பேரவை என்ற சிறப்பும் கிடைக்கும் என்று பேரவைத் தலைவர் திரு விஜேந்தர் குப்தா தெரிவித்துள்ளார்.

<<<><><><>>>

சத்தீஷ்கர் மாநிலம் ராய்பூர் அருகே நேற்றிரவு நேரிட்ட சாலை விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர்.

திருமண நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற சுமார் 40 பேர் ராய்பூரை அடுத்த சாராகவுன் என்னும் இடத்தில் வந்து கொண்டிருந்த போது இவர்களது வாகனம் டிரக் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த அனைவரும் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த 10க்கும் மேற்பட்டோர் ராய்பூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

<<<><><><>>>

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் 50 க்கும் மேற்பட்ட இடங்களில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பலூச் விடுதலை அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

பாகிஸ்தானில் இருந்து பிரித்து பலுசிஸ்தானை தனிநாடாக அறிவிக்கக்கோரி, இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக பலூச் விடுதலை அமைப்பு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் அரசு, லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஸ் இ முகமது, ஐ எஸ் ஐ எஸ் போன்ற பயங்கரவாத குழுக்களுக்கு புகலிடம் அளிப்பதாக அந்த அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

<<<><><><>>>

*<u>விளையாட்டுச் செய்தி</u>*

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக இந்திய வீரர் விராட் கோலி அறிவித்துள்ளார்.

தமது சமூக வலைதளப் பக்கத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், சர்வதேச போட்டிகளில் தமது 14 ஆண்டுகால பயணம் நினைத்து பார்த்திராத ஒன்று என தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகள் தம்மை ஆளாக்கியதுடன், வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய பாடங்களை தமக்கு போதித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரசிகர்களுடன் தாம் எப்போதும் இருப்பேன் என்றும் விராட்கோரி கூறியுள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான சர்வதேச போட்டியில் முதன்முறையாக களமிறங்கிய விராட் கோலி, இதுவரை 123 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று 9 ஆயிரத்து 230 ரன் எடுத்துள்ளார்.

மேலும், அவர் கேப்டனாக இருந்த காலத்தில் அதிக சதம் மற்றும் இரட்டை சதம் அடித்தவர் என்ற சிறப்பையும் பெற்றுள்ளார்.

<< End of News >>